From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 3 /2012

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : மணியம்மாள் | Father/Husband Name | : ஞானதேசிசன் |
| Age | : | Calling | : |
| Date | : 22.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் இறுதியாக திருப்பரகுன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2013ம் வருடம் பணி நிறைவு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். 2011ம் வருடம் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலைத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் விஜயா தற்போது இறந்துவிட்டதால் அவருடைய கையொப்பமும், அவருடன் பணிபுரிந்ததால் அவர் தயார் செய்த ஆவங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 11.07.2011ம் தேதி 20.00 மணிக்கு மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் விஜயா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட CAMPGDP / 247 / SPMD/11 தபாலை பார்வையிட்டு மேலூர் வட்டம், வஞ்சிநகரம், வீரசூடாமணியைபட்டியை சேர்ந்த திருநாவுகரசு என்பவரின் மனைவி தமிழ்செல்வி கொடுத்த மனு மீது நிலைய குற்ற எண் 11/11 பிரிவு 498(A), 406, இதச மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் 4ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். 12.07.2011 ம் தேதி சாட்சிகள் தமிழ்செல்வி, சிவானந்தம், பாண்டி, ராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 12.07.2011 ம் தேதி காலை 06.00 மணிக்கு 1ம் எதிரி திருநாவுக்கரசை மேலூர் பஸ் நிலையம் அருகே வைத்து கைது செய்து 06.15 மணிக்கு நிலையம் வந்து பாரா வசம் ஒப்படைத்து, 12.00 மணிக்கு திரு. முருகேசன், மற்றும் ராஜதேவன் ஆகியோர்கள் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். 28.08.2011 ம் தேதி சாட்சிகள் சபாபதி மற்றும் காஞ்சிவனம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 07.09.2011 ம் தேதி எதிரிகள் 2 மற்றும் 3 ஆகியோர்கள் மாண்புமிகு மதுரை அமர்வு நீதிமன்றத்தி முன்ஜாமீனில் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

21.09.2011 ம் தேதி காவல் ஆய்வாளர் திருமதி, விஜயா பணி மாறுதலில் சென்றுவிட்டதால் இவ்வழக்கை எனது விசாரணைக்கு கொண்டேன். விசாரணையில் பட்டியல் சாட்சிகள் ஆய்வாளரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றையதினம் சாட்சி ஆண்டிச்சாமியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.11.2011 ம் தேதி 1ம் எதிரிக்கும் 4ம் எதிரிக்கும் பிறந்த குழந்தையான துவாரகசிரி பிறப்பு சான்றிதழை சென்னை பொது சுகாதார துறை அலுவலகத்திலிருந்து மருத்துவர் திரு.குகநாதனிடமிருந்து பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழ் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

23.11.2011 ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவு 498(A), 406, இதச

மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் 4 உடன் 494, உடன்இணைந்த 109 சேர்த்து சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டபிரிவுகள் மாறுதல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 23.11.2011ம் தேதி 1வது எதிரி மீது 498(A), 406, 494 இதச மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் 4ன்கீழும், 2 மற்றும் 3ம் எதிரி மீது 498(A), 406, 494 இதச மற்றும் உடன் இணைந்த 109 மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் 4ன்கீழும், 4ம் எதிரி மீது 494 இதசன்கீழும், 5 முதல் 7 எதிரிகள் மீது 498(A), 494 மற்றும் உடன் இணைந்த 109 இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரர் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 22.06.2011ம் தேதி கொடுக்கப்பட்ட புகார் மேலூர், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 23.06.2011ம் தேதி வரப்பட்டது என்றால் சரிதான், அந்த புகாரில் காவல் கண்காணிப்பாளரால் மேற்குறிப்புகள் புகார் மனுவில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 2 முதல் தகவல் அறிக்கையில் காலம் 3ல் காலம் bல் தகவல் கிடைத்த நாள் 11.07.2011 என்று உள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய கால தாமத்திற்கான காரணங்கள் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான். புகார் மனுவில் புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் திருமணமான நாள் 26.10.1994ம் ஆண்டு என்று உள்ளது என்றால் சரிதான். இந்த புகாரானது திருமணமான 16 ஆண்டுகள் கழித்து கொடுக்கப்பட்ட புகார் என்றால்

சரிதான். அசாஆ1 புகாரில் 07.11.2010ம் தேதி மேலவளவு காவல் நிலையத்தில் புகார்தாரர் புகார் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் மனு வின் மனு ரசீது புகாருடன் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இதற்கு முன்னர் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் மேற்கூறிய புகாரின் ஆவணங்களை இந்த புகாருடன் இணைக்கவில்லை என்றால் சரிதான். நானும், சாட்சிகளை விசாரணை செய்தபின்னர் மேற்கூறிய புகாரின் ஆவணங்களை இந்த வழக்கு கோப்புகளுடன் இணைக்கவில்லை என்றால் சரிதான்.

2) இந்த வழக்கின் புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் மாண்புமிகு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP No. 496/2000 என்ற வழக்கு தாக்கல் செய்த வழக்கின் நகல் வழக்கு கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. இவ்வழக்கில் மேற்சொன்ன HMOP வழக்கின் சாராம்சங்களை விசாரித்து இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இவ்வழக்கு வரதட்சணை தடுப்பு சம்மந்தமான வழக்கு என்பதனால் HMOP வழக்கு குறித்து ஆவணங்களை நான் சேர்க்கவில்லை.

3) இதற்கு முன்னர் புகார்தாரர் கொடுத்த புகாருக்கு மேலவளவு காவல் துறையினர் இரு தரப்பினர்களையும் நீதிமன்றத்தில் பிரச்சனையை முடித்து கொள்ள சொன்னதனால்தான் இவ்வழக்கில் அந்த ஆவணங்களை நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, மேற்சொன்ன புகாரில் புகார்தாரரின் கணவரான 1ம் எதிரி தன்னுடன் சேர்ந்து வாழ்ந்வதாக சொன்னதனால் புகார் முடிக்கப்பட்டது. மேலவளவு காவல் நிலையத்தில் புகார்தாரரிடம் இது கணவன், மனைவி பிரச்சனை என்பதாலும், வழக்கில் வரதட்சணை கொடுமை எதுவும் இல்லை என்பதாலும், நீதிமன்றத்தில் இதுகுறித்து மேல் நடத்தமாற சொல்லி அந்த புகார் முடிக்கப்பட்டது என்பதனால் அந்த புகாரின் ஆவணங்களை

இவ்வழக்குடன் சேர்த்தால் வழக்கிற்காக பாதகம் ஆகும் என்பதால் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் புகார் கொடுத்த போது புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் பிறந்த குழந்தையின் வயது 15 ஆகும், அந்த குழந்தையும் 1ம் எதிரியுடன்தான் இருந்தது என்றால் சரிதான். புகார்தாரர் புகார் கொடுத்தபோது அந்த குழந்தையை 1ம் எதிரியிடமிருந்து பெற்று தருமாறு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் இல்லை, எனது விசாரணையில் குழந்தையை மீட்டுக்கொடுக்குமாறு சொல்லியுள்ளார்.

3) புகார்தாரர் புகார் மனுவில் 15 பவுன் தங்க நகை, கணவருக்கு கொடுத்த 3 பவுன் செயின், 25,000 மதிப்புள்ள TVS Suzuki இருசக்கர வாகனமும், சுமார் 50,000/–மதிப்புள்ள சீதன பொருட்களை எனக்கு முன்னாள் விசாரணை செய்த ஆய்வாளரோ, அல்லது நானோ, 1ம் எதிரியிடமிருந்து பெற்று புகார்தாரரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை, அவ்வாறு பொருட்களை எதனால் பெற்று தரவில்லை என்றால் புகார்தாரர் கணவருடம் சேர்த்து வைக்க சொன்னதனால் பொருட்களை வாங்கி தருவதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே, புகாரில் வரதட்சணை கேட்டதாக சொல்வதெல்லாம் தேவையற்ற காரணங்கள் என்றால் சரியல்ல.

4) புகாரில், 1ம் எதிரி 2ம் திருமணம் செய்ததற்கு நடவடிக்கை எடுக்க சொல்லி கேட்டுள்ளார் என்றால் அதையும் சொல்லியுள்ளார், புகாரில் சொன்னதுபோல் எந்த ஒரு குற்றமும் நடைபெறவில்லை, வாதிக்கு ஆதரவாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, இதச பிரிவு 494 ன்கீழ் உள்ள குற்றங்களை விசாரணை செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, இதச பிரிவு 498(A) உடன் இணைத்து 494யும் விசாரித்துள்ளேன். மாண்புமிகு

உச்ச நீதிமன்றம் கூறியுள்ள வரையறைக்குள் நான் இவ்வழக்கினை புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.